# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 108/நகராட்சி/2019**

**நாள் : 30/09/2019**

**திரு C. ஆறுமுகம்,**
**வேலூர் – 632 006.** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**வாணியம்பாடி நகராட்சி,**
**வாணியம்பாடி.** – **எதிர் மனுதாரர்**

வேலூர் மாவட்டம், காந்தி நகர், கழிஞ்சூர், பஜனை கோயில் தெரு, 14–கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு C. ஆறுமுகம் அவர்களின் 03.07.2019 நாளிட்ட மனு, இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 108/2019 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீடு குறித்து நகராட்சி ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் விசாரணையின் போது முறையீட்டு மனுதாரர் அளித்த வாக்குமூலம் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

வேலூர் மாவட்டம், காந்தி நகர், கழிஞ்சூர், பஜனை கோயில் தெரு, 14–கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு C. ஆறுமுகம் என்பவர், தான், 12.12.1973 முதல் 23.04.1992 வரையிலும் மற்றும் 11.06.1997 முதல் 09.07.1998 வரையிலும் பல்வேறு நிலைகளில் வாணியம்பாடி நகராட்சியில் பணிபுரிந்ததாகவும், தனது பணிக்காலத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சேமநலநிதிக்கு வட்டித் தொகை வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். இது சம்பந்தமாக வாணியம்பாடி நகராட்சிக்கு ஐந்து முறை விண்ணப்பித்தும் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை குறித்து நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. சேமநலநிதிக்கு வட்டி வழங்கக்கோரும் முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை 40 ஆண்டுகளுக்கு மேற்பட்டது என்றும், தனியரின் ஊதியத்தில் பிடித்தம் செய்த சேமநலநிதிக்கான விவரம் அடங்கிய பதிவேடு நகராட்சியில் தற்பொழுது கிடைக்கப்பெறாத காரணத்தால், சேமநலநிதி பிடித்தம் செய்த விவரம் அடங்கிய ஆதாரங்களை நகராட்சிக்கு வழங்கினால் மனுதாரரின் கோரிக்கையினை பரிசீலனை செய்து வட்டித் தொகை கணக்கீட்டு வழங்கப்படும் என நகராட்சி ஆணையர் தனது 25.07.2019 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

3. முறையீட்டு மனுதாரரிடம் 25.09.2019 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. வாணியம்பாடி நகராட்சி மற்றும் குடியாத்தம் நகராட்சிகளில் பணியாற்றியபோது பிடித்தம் செய்யப்பட்ட சேமநலநிதித் தொகைக்கு வட்டி வழங்கப்படவில்லை எனத் தெரிவித்தார். மேலும், தான் பணியாற்றிய காலத்திற்கான பணி சம்பந்தப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் தன்னிடம் உள்ளன என்றும் முறையீட்டு மனுதாரர் தெரிவித்தார்.

4. முறையீட்டு மனுதாரர் 30.11.2011–இல் குடியாத்தம் நகராட்சியில் பணியாற்றியபோது பணி ஒய்வு பெற்றுள்ளார். வாணியம்பாடி நகராட்சியில் பணியாற்றியபோது பிடித்தம் செய்யப்பட்ட சேமநலநிதிக்கான ஆவணங்களை நகராட்சிக்கு சமர்ப்பிக்கும் நிலையில் வட்டித் தொகையினை கணக்கிட்டு வழங்கிட நகராட்சியால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என நகராட்சி ஆணையர் உறுதி அளித்துள்ளார். எனவே, முறையீட்டு மனுதாரர், சேமநலநிதி பிடித்தம் செய்தது சம்பந்தமான ஆவணங்களை வாணியம்பாடி நகராட்சி ஆணையருக்கு முறையான விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது. முறையீட்டு மனுதாரரிடமிருந்து பெறப்படும் ஆவணங்களை உடன் பரிசீலித்து, உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் ஒப்புதலினை பெற்று சேமநலநிதிக்கான வட்டித் தொகையினை வழங்கிட காலதாமதமின்றி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வாணியம்பாடி நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

**2019– ஆம் ஆண்டு,** செப்டம்பர் திங்கள், **30–ஆம்** நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

14/10/19

பெறுநர்

1. திரு C. ஆறுமுகம்,
   **14, பஜனை கோயில் தெரு,**
   **கழிஞ்சூர், காந்தி நகர் அஞ்சல்,**
   **வேலூர் – 632 006.**

2. **நகராட்சி ஆணையர்,**
   **வாணியம்பாடி நகராட்சி,**
   **வாணியம்பாடி.**

3. **நகராட்சி ஆணையர்,**
   **குடியாத்தம் நகராட்சி,**
   **குடியாத்தம், வேலூர் மாவட்டம்.**

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
**இ.கோ. / உதிரி**